# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073074

C

1. District : Tiruvannamalai
மாவட்டம்
PS: V & AC
காவல்நிலையம் Tiruvannamalai
Year: 2019
ஆண்டு
FIR No.: 3/19
மு.த.அ. எண்
Date: 10.2.2019
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: 1988 as amended by PC Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act. 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 24.12.18 and
நாள் முதல்
Date to :
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from : 24.1.19
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.2.2019
Time : 18.00hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.2.2019
Time : 18.00hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Jamunamarathur Taluk office
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 75 kms, North West
Beat Number : —
முறைக் காவல் எண்
(b) Address : —
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : —
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Chinnapaiyan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Tr. Kuppusamy
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 26
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Farmer
தொழில்
(g) Address : No. 84, Perathukollai Village, Kovilandur (Post) Jamunamarathur Taluk, Tiruvannamalai. Dt
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Dasarathan, Revenue Inspector, Namianpattu Firka, Jamunamarathur Taluk, Tiruvannamalai-Dt

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Chinnapayan 10/2/19

[signature] 10/2/19.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10.02.2019 at 20.30hrs

Name: பெயர் M. Rajanikanth
Rank: நிலை Inspector of Police No. எண் ………
V&AC, Tiruvannamalai.

பணிந்து அனுப்பப்படுகிறது:- திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 10.02.2019-ம் தேதி மாலை 18.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திரு. K.சின்னபையன் த/பெ குப்புசாமி, எண்.84, பேராத்துக்கொல்லை கிராமம், கோவிலாண்டூர் அஞ்சல், ஜமுனாமரத்தூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி தட்டச்சு செய்த புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனு பின்வருமாறு, விடுநர் K.சின்னபையன், த/பெ குப்புசாமி, எண்.84, பேராத்துக்கொல்லை கிராமம், கோவிலாண்டூர் அஞ்சல், ஜமுனாமரத்தூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம், திருவண்ணாமலை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.Sc.,B.Ed., வரை படித்துள்ளேன். தற்போது என் தந்தையுடன் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 8 பேர் அதில் எனக்கும் ஒரு அக்காவுக்கும் திருமணமாகவில்லை. என் அப்பாவுக்கு சுமார் 2½ ஏக்கர் நிலம் பேராத்துக்கொல்லை கிராமத்தில் விவசாய கிணற்றுடன் உள்ளது. மேற்படி கிணற்றிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் பாய்ச்ச ஆயில் இன்ஜின் வைத்து உபயோகித்து வருகிறோம். என் அப்பா குப்புசாமி அவர்கள் 2017-ஆம் ஆண்டு ஆரணி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயற்பொறியாளர் அலுவலகத்தில் எங்கள் நிலத்தில் உள்ள கிணற்றிற்கு 5HP மோட்டாருக்கான மின்சார இணைப்புக்காக விண்ணப்பம் கொடுத்திருந்தார். அது செயற்பொறியாளர் அலுவலகத்தில் எண்.188 நாள்.22.09.2017 என்று பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன்பின்னர் நான் கடந்த 2018 நவம்பர் மாதம் மின் இணைப்பிற்காக ஆரணி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று விசாரித்தபோது என் தந்தை பழங்குடி இந்து மலையாளி (ST) என்பதால் மின்சார இணைப்பிற்கு முன்னுரிமை கிடைக்கும் என்று சொன்னார்கள். அதற்காக படிவம்-2 வேளாண்மை மின்னிணைப்பு விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்து அதனுடன் பொருளாதாரத்தில் பின்தங்கியவர் மற்றும் ST என்ற சான்று இணைத்து கொடுக்குமாறு சொன்னார்கள். என் தந்தை வயதானவர் என்ற காரணத்தினால் என் தந்தையின் மனுவை என் அண்ணன் வள்ளிக்கண்ணன் அவர்கள் கடந்த 2018 நவம்பர் மாதத்தில் பொருளாதரத்தில் பின்தங்கியவர் சான்று வேண்டி மனு ஒன்றை ஜமுனாமரத்தூர் தாலுக்கா நம்மியம்பட்டு பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.தசரதன் அவர்களிடம் கொடுத்துவிட்டு வந்தார். அதன்பின்னர் யாரும் விசாரணைக்கு வராததால் நான் கடந்த 24.12.2018-ஆம் தேதி பகல் சுமார் 01.00 மணியளவில் ஜமுனாமரத்தூர் தாலுக்கா அலுவலகத்தில் நம்மியம்பட்டு பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.தசரதன் அவர்களை சந்தித்து

மனுவை பற்றி கேட்டேன். அதற்கு அவர் மேற்படி மனுவை உடன் நம்மியம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு அனுப்பி சரிபார்த்து அவரது அறிக்கையை பெற்று நான் உடன் தாசில்தாருக்கு பரிந்துரை செய்ய ரூ.10,000/-ஆம் எனக்கு இலஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் நானே படித்துவிட்டு வேலையில்லாமல் என் அப்பாவுடன் சேர்ந்து கொஞ்சமான நிலத்தில் விவசாயம் செய்து வருகிறோம். அதில் வரும் வருமானத்தில்தான் எங்கள் குடும்பம் பிழைத்து வருகிறது, நாங்கள் ஏழைப்பட்ட குடும்பம் கொஞ்சம் குறைத்துச்சொல்லுங்கள் என்று கேட்டேன், அதற்கு நம்மியம்பட்டு பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.தசரதன் அவர்கள் சிறிது நேர யோசனைக்குப்பின்பு, சரி அப்ப பணம் ரூ.2,500/- குறைத்துக்கொண்டு ரூ.7,500/-ஐ எனக்கு கொடுத்துவிடு உங்களுக்கு சேர வேண்டிய பொருளாதாரத்தில் பின்தங்கியவர் சான்றை பெற பரிந்துரை செய்கிறேன் என்று கண்டிப்பாக சொல்லி அனுப்பிவிட்டார். நான் மீண்டும் 24.01.2019-ஆம் தேதி பகல் 11.30 மணியளவில் ஜமுனாமரத்தூர் தாலுக்கா அலுவலகம் சென்று நம்மியம்பட்டு பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.தசரதன் அவர்களை அவரது இருக்கையில் சந்தித்து நிலுவையில் உள்ள சான்றை பற்றி கேட்டபோது அவர் நான் கேட்ட பணம் ரூ.7,500/-ஐ கொண்டு வந்துள்ளாயா என்று கேட்டார். நான் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன் என்று சொல்லவே என்னை நம்மியம்பட்டு கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று சரிபார்ப்பு அறிக்கையை பெற்று அந்த அறிக்கையை தன்னிடம் வந்து கொடுக்கும்படியும், அப்படி வரும்போது தான் கேட்ட இலஞ்சப்பணம் ரூ.7,500/-ஐ கொடுத்தால் தான் அன்றே பரிந்துரை செய்து ஜமுனாமரத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிவிடுவதாகவும் பணம் கொடுக்கவில்லை என்றால் நிலுவையில் தான் இருக்கும் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். நான் அன்றே நம்மியம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் அவர்களை பார்க்க சென்ற போது அவர் அலுவலகத்தில் இல்லை. பின்னர் 02.02.2019-ஆம் தேதி நான் கிராம நிர்வாக அலுவலர் திரு.கண்ணன் அவர்களை பார்த்து விவரத்தை சொன்னவுடன் அன்றே வீட்டினிடம் வந்து சரிபார்த்து சரிபார்ப்பு சான்று கொடுத்தார். அதன்பின்னர் 03.02.2019-ஆம் தேதி நிலத்தின் வரைபடம் FMB ஆகியவற்றை என்னிடம் கொடுத்தார். எனக்கு நம்மியம்பட்டு பிர்கா வருவாய் ஆய்வாளர் திரு.தசரதன் அவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர் சான்று வழங்க வட்டாட்சியருக்கு பரிந்துரை செய்ய கேட்ட இலஞ்சப்பணம் ரூ.7,500/-ஐ கொடுக்க விருப்பம் இல்லை. இன்று 10.02.2019-ம் தேதி மாலை 06.00 மணிக்கு திருவண்ணாமலை காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு வந்து பொருளாதாரத்தில் பின்தங்கியவர் சான்று வழங்க பரிந்துரை செய்வதற்காக பணம் ரூ.7,500/- இலஞ்சமாக கேட்ட நம்மியம்பட்டு பிர்கா வருவாய் ஆய்வாளர்

திரு.தசரதன் அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க தட்டச்சு செய்த புகார் மனுவை காவல் ஆய்வாளர் அவர்களிடம் அளிக்கிறேன், நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (SD/XXXXX) K.Chinnapaiyan 10/2/19.

இணைப்பு: 1.கிணர் உரிமைச்சான்று நகல் 2.பேராத்துக்கொல்லை மேட்டுக்குடி அவர்களின் வாக்குமூல நகல் 3. அடங்கல் நகல் 4.வரைபடம் (FMB) நகல் 5.வேளாண்மை மின்இணைப்பு விண்ணப்ப படிவம்-2 நகல் 6.தமிழ்நாடு மின்சார மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் திரு.குப்புசாமி அவர்கள் 5 குதிரை சக்தி மின்சார இணைப்பு வேண்டி பதிவு செய்த இரசீது நகல்

Sir,

Received the complaint on 10.02.2019 at 18.00 hrs and a quick verification on the general reputation of the accused had made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 10.02.2019 at 19.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.03/2019, u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint with enclosures was sent to Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-xxxxxx) 10/2/19 M.RAJANIKANTH, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Tiruvannamalai.

10/2/19

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Tiruvannamalai.